**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (திட்டம் -1) - 2018**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் (திட்டம் -1) 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை மின்சார சபைக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ஏடிபீ) இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 நவம்பர் 20 ஆம் திகதிய எஸ்ஆர்ஜ 47037 ஆம் இலக்க செயற்திட்ட உடன்படிக்கையின் II ஆம் உறுப்புரையின் 2.09 (அ) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், வலு, மின்சக்தி மற்றும் வர்த்தக அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளடுதடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. தூய வலு உற்பத்தி, முறைமை வினைத்திறன் மற்றும் உண்மைத்தன்மையை முன்னேற்றுவதே நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோளாகும். வசதி நிர்வாக கைநூலின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 28,509.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 220 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 23,325.50 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2015 பெப்ரவரி 02 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2.1 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கையில் முகாமைத்தவமானது தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவாக தொருவதற்கு, பிரயோகிக்கக் கூடியவையாக வெளிப்படுத்தல், தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவுடன் தொடர்புபட்ட விடயங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் திரவத்தன்மைக்கு முகாமைத்துவம் அல்லது குறித்த தரப்பினர் கணக்கீட்டின் தொடர்ந்து செல்லும் அடிப்படையை பயன்படுத்தல் அல்லது நெகிழ்ச்சித் தன்மையுடைய மாற்றுவழியை உருவாக்கல் அல்லது வைத்திருத்தல் ஆனால் அதேபோல செய்வதற்கு ஏற்றவாறு நிகழ்ச்சித்திட்டத்தினை மதிப்பிடுவதற்காக பொறுப்புடையது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்கள் இயலக்கூடியவாறு சகல வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பவற்றின் முறையான புத்தகங்கள் மற்றும் ஏடுகள் பேணுவதற்கு செயற்திட்டம் வேண்டப்பட்டள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீடுக் குறைபாடுகள்

| கணக்கீடுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் பொறுப்பு | கணக்காய்வாளரின் சிபார்சு |
|---|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைதவிர்க்கப்பட்ட வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பதிவேடுகளில் காட்டப்பட்ட ரூபா 1,924 மில்லியன் தொகை நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 1,888 மில்லியன் தொகையான கைதவிர்ப்பகளுடன் உடன்பட்டிருக்கவில்லை. | கடன் மீதி குறைத்துக் கூறப்பட்டிருந்தது. | மொறகொல்ல நீர் மீன்சகத்தி செயற்திட்டத்தில் பெறப்பட்ட கைதவிர்ப்பு பெறுகைகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை . | வெளிநாட்டு வளங்கள் திணைக்களப் பதிவேடுகளுடன் பயன்படுத்திய கடன் பெறுகைகளை இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை | விளைவு | முகாமைத்துவ பொறுப்புகள் | கணக்காய்வாளரின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 மாதத்தின் MOFP/ERD/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட பிரதான வேண்டுகை நிறைவெற்றப் பட்டிருக்கவில்லை.. | வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின நிதிக்கூற்றுக்கள் இலங்கை மின்சார சபையின் இணைந்த நிதிக்கூற்றுக்கள் இறுதியாக்கிய பின்னர் தயாரிக்கப் பட்டீருந்தனன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க வேண்டிய தேவை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | நிகழ்ச்சிதிட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 15 .இலேயே சமர்ப்பிக்கப் பட்டிருந்தது. | | | |
| (ஆ) | செயற்திட்ட உடன்படிக்கையின் 2.09 (அ) ஆம் பிரிவு | நிகழ்ச்சிதிட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு இலங்கை மின்சார சபையால் புறம்பான பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதி முகாமைத்துவ கட்டுப்பாடு நலிவாகவுள்ளது | இலங்கை மின்சார சபையின் சகல பிரிவுகளிலும் அவர்களுடைய கட்டுப்பாட்டின் கீழ் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்ட பதிவேடுகளை வைத்திருக்கின்றன. | நிகழ்ச்சிதிட்டத்தின் கொடுக்கல் வாங்கல்களை பதிவதற்கு இலங்கை மின்சார சபையால் புறம்பான கணக்குப் பதிவேடுகள் பேணப்பட வேண்டும். |
| (இ) | நிதிப்பிரமாணம் 134(3) மற்றும் 2010 யூலை 26 ஆந் திகதிய 05 ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கை | நிகழ்ச்சிதிட்டத்தின் கொடுக்கல் வாங்கல்கள் இலங்கை மின்னசார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்விற்கு உட்படுத்தப் பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நலிவாகவுள்ளது. | அடுத்துவரும் மாதங்களில் கணக்காய்வினை மேற்கொள்வதற்கு பட்டியலிப்பட்டதுடன் முன்னுரிமை விடயங்கள் 2019 இற்குள் பூர்த்தியாக்கப்படும். | நிகழ்ச்சிதிட்டத்தின் செயற்பாடுகள் ஆக்பூர்வமாகவும் வினைத்திறனான வழியில் தொடருவதில் உள்ளக கணக்காய்வு பிரிவால் மீளாய்வு செய்யப்பட வேண்டிய தேவை. |
| (ஈ) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய PED 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை. | நிகழ்ச்சிதிட்டம் உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்தியிலுந்ததுடன் மீளாய்வு ஆண்டின் போது உரிய ஊழியர்களின் சம்பளங்களிலிருந்து கிழிப்னவு செய்யாமல் அதன் சொந்த நிதிகளிலிருந்து உழைக்கும் போது செலுத்தும் வரியாக ரூபா 34.77 மில்லியன் செலுத்தியிருந்தது | நிகழ்ச்சித்திட்ட கண்காணிப்பு பிரிவ கிரயம் அதிகரிக்கின்றது | இலங்கை மின்சார சபையின் ஊழியர்களின் உழைக்கும் பொது செலுத்தும் வரிய இலங்கை மின்சார சபையால் செலுத்தப்பட்டிருந்தது.. | PAYE வரி ஊழியர்களின் மொத்தச் சம்பளங்களிலிருந்து அறவிடப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

--------------------------------

### 3.1 நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

----------------------------------------------------------------------------------------------------

நிகழ்ச்சிதிட்டத்தின் நடவடிக்கைகளானது 05 பகுதிகளை கொண்டுள்ளதுடன் நிகழ்ச்சிதிட்டத்தின் அத்தகைய பகுதிகளின் நடவடிக்கைகளின் மேற்பார்வை மற்றும்

கண்காணிப்பு இலங்கை மின்சார சபையின் பிரதேச தலைவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கூறு | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பொறுப்பு | கணக்காய்வாளரின் சிபார்சு |
|---|---|---|---|---|---|
| (அ) | நீர் மின்சக்தி உருவாக்கல் | நீர் மின்சக்தி மின்சாரம் உருவாக்கல் இயலளவை உயர்த்துவதற்கு மொனறாகலையில் நீர் மின்சார பொறி நிர்மாணத்திற்கான கேள்வி ஆவணங்களை மீளாய்வு செய்வதற்கு வழங்கப்பட்ட ஆலோசனை ஒப்பந்தம் 2017 திசெம்பர் 27 இல் பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் நீர் மின்சார பொறியின் நிர்மாண வெலைகள் மற்றும் அவற்றின் எந்திரவியல் மற்றும் மின்னியல் வசதிகளை வழங்குதல் போன்றன 2018 திசெம்பர் 31 வரையும் ஆரம்ப கட்டத்திலேயே இருந்தது | நீண்டகால கிரய மின்சாரம் உருவாக்கல் பொறியின் நோக்கங்கள் அடைய முடியாதிருக்கும். | ஆலோசனையாளர் நியமிப்பதில் உள்ள தாமதங்கள் காரணமாக, மின்சக்தி உருவாக்கல் நடவடிக்கைகளை வேறு முகவர்கள் மற்றும் கொள்வனவுகள் போன்றவற்றிலான அனுமதிகள் இலங்கை மின்சார சபை கட்டுப்பாடு பின்தங்கியமையால் 31/2 ஆண்டுகளிற்கு மேலாக தாமதப்பட்டிருந்தது. | நிகழ்ச்சிதிட்டத்தின் நடவடிக்கைகள் கடப்பாட்டு கட்டணங்கள் விதிப்பதை தவிர்ப்பதற்கும் நிகழ்ச்சிதிட்டத்தின் நோக்கங்களை அடைவதற்கும் செயல்நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் அமுலாக்கப்பட வேண்டிய தேவை. |
| (ஆ) | பரிமாற்ற கட்டமைப்பு இயலளவை உயர்த்துதல் | பரிமாற்ற கட்டமைப்பு இயலளவை உயர்த்துவதற்காக கப்பைதுறையில் மற்றும் கெரவலபிட்டிய, கட்டுநாயக்க மற்றும் திருகோணமலை என்பவற்றில் உப கட்ட நிலைய நிர்மாண வேலைகளின் பௌதீக முன்னேற்றம் நிகழ்ச்சித் திட்டம் தொடங்கி 04 ஆண்டுகள் கடந்த பின்னர் 75 சதவீதமான மெதுவான முன்னேற்றமாக இருந்தது. | -மேற்படி- | கருத்து தெரிவிக்கப் படவில்லை. | -மேற்படி- |
| (இ) | வினைத் திறனான நடுத்தர வோல்ரேச் வலையமைப்பு | மட்டக்களப்பு மாவட்டத்தில் 57 கிலோமீற்றர் மற்றும் குருநாகல் மாவட்டத்தில் 20 கிலோமீற்றர் | --மேற்படி- | இலங்கை மின்சார சபை கட்டுப்பாடு பின்தங்கியிருந்த கோபுர அமைவிடங்கள் | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | என்பவற்றின் உயர் பரிமாற்ற வழிகளின் பொருத்ததலின் கீழான வேலைகள் மற்றும் வினைத் திறனான நடுத்தர வோல்ரேச் வலையமைப்பை உயர்த்துவதற்காக வவுணதீவு, மற்றும் மாதம்பேயில் குழுக்கலின் நிர்மாண வேலைகள் என்பவற்றின் பௌதீக முன்னேற்றம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 93.30 சதவீதமாக இருந்தது. | | மீதான சட்ட தகராறுகளால் வவுணதீவு மின் வழிகளின் முன்னேற்றம் பாதிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | வினைத் திறனான மின் சக்திக்கான பக்க முகாமைத்துவ கேள்வி | ஆக்கபூர்வமான மற்றும் வினைத்திறனான மின் சக்திக்கான பக்க முகாமைத்துவ கேள்விக் கூறின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட ஸ்மாட் மீற்றரிடல் முன்னோடி செயற்திட்டங்கள் பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 04 மாதங்கள் கடந்த பின்னர் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | கைதவிர்க்கப்படாத மீதிகளிற்காக கடப்பாட்டுக் கட்டணங்கள் சாட்டுதல் செய்யப்படும். | கருத்து தெரிவிக்கப் படவில்லை. | -மேற்படி- |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவ பொறுப்பு | கணக்காய்வாளரின் சிபார்சு |
|---|---|---|---|
| நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்குறிப்பிட்ட 05 பகுதிகளின் மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு இலங்கை மின்சார சபையால் கையாளப்பட்ட சகல வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்களும் மேற்பார்வை செய்வதற்காக பொறுப்புடைய மேலதிக பொது முகாமையாளரிற்கு (செயற்திட்டங்கள்) பதிலாக இலங்கை மின்சார சபையின் பல்வேறு பிரவுத் தலைவர்களன் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. | மேற்பார்வை மற்றும் கண்காணிப்பு பொறிமுறை நலிவாக இருந்ததுடன் நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகளை பூர்த்தியாக்குவதிலான முன்னேற்றம் மெதுவாக இருந்தது. | 2010 ஆகஸ்ட் 25 இன் சபை தீர்மானத்தின் பிரகாரம், மேலதிக பொது முகாமையாளர் (செயற்திட்டங்கள்) செயற்திட்டங்களின் புனரமைப்பைத் தவிர பரிமாற்றம் மற்றும் உருவாக்கல் செயற்திட்டங்கள் மாத்திரம் நிறைவேற்றுவதற்கு பொறுப்பாகவுள்ளது. | நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் ஒட்டுமொத்த மேற்பார்வை மற்றும் கண்காணிப்பதற்காக பொறுப்பாக சிரேஸ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் நியமிப்பதற்கான தேவை. |